பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 01 திங்கட்கிழமை (15.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 51

# புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி விலகும்?

## உத்தேச முக்கிய சந்திப்பிலிருந்து ரணில் வெளிநடப்புச் செய்யக்கூடும்

கொழும்பு,ஜனவரி15

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதியன்று கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் முறிவடையலாம்.**

**அதாவது அந்த ஒப்பந்தத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி அனேகமாக விலக்கிக்கொள்ளும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.**

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தொடர்ந்து முன்னெடுப்பதா அல்லது முறித்துக் கொள்வதா என்பது தொடர்பான பேச்சுக்கள் இன்று அல்லது நாளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நடைபெற உள்ளது.

இதற்கிடையில் -

உத்தேச சந்திப்புக்குச் செல்லும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பேச்சில் சிறிது நேரம் கலந்துகொண்டுவிட்டு அங்கிருந்து வெளிநடப்புச் செய்வார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து கிடைத்த பிந்திய தகவல்கள் தெரிவித்தன.

இருபதுக்கும் அதிகமான ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத் தரப்புக்குத் தாவுவார்கள் என்பதும், அவர்களுக்கு 'குட்டி' அமைச்சர் பதவிகள் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுத்துள்ளார் என்பதும் தெரிந்ததே.

தமது உறுப்பினர்களை அரசாங்கம் சேர்த்துக்கொண்டால் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து விலகுவது என்பதில் ஐக்கிய தேசியக் கட்சி உறுதியாக உள்ளது என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்சி தாவும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அநேகமாக அடுத்த வாரத்திலோ அதற்கு முன்னரோ அமைச்சர்களாகப்

(08ஆம் பக்கம் பார்க்க)




## இரவு 7 மணிமுதல் ஊரடங்கு அமுல்

யாழ்ப்பாணம்,ஜன.15

குடாநாட்டில் இன்று முதல் மறுஅறிவித்தல்வரை இரவு 7 மணிமுதல் அதிகாலை 4மணிவரை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என்று யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது. வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் பகுதிகளில் இந்த நேரங்களில் ஊரடங்கு அமுலில் இருக்கும் என்றும் விவரிக்கப்பட்டது. (அ-1)

## அமைதியைக் கொண்டுவரக் கூடிய சிறந்த நாள்களை எதிர்பார்ப்போம்!

### தைப்பொங்கல் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 15

நாட்டுக்கு அமைதியைக் கொண்டுவரக் கூடிய சிறந்த நாள்களை எதிர்பார்ப்போம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது தைப்பொங்கல் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதியின் பொங்கல் செய்தி வருமாறு:-

இந்துக்களின் மிகப் பிரபலமான பண்டிகைகளில் ஒன்றான தைப்பொங்கல் இலங்கையில் நெடுங்காலமாக மதிக்கப்பட்டு வரும் மத வழிபாடுகள், மரபுகளுடன் கூடிய குடும்பப் பண்டிகையொன்றாக நூற்றாண்டுகளாக எமது நாட்டில் கொண்டாடப்பட்டு வருகின்றது. இலங்கையில் வாழும் இந்துக்கள் இன்றுவரை வளமான தமது கலாசாரப் பாரம்பரியங்களைப் பின்பற்றி அவர்களது அர்ப்பணிப்பை அடையாளங் காட்டி இந்த மரபுகளைத் தொடர்ந்தும் பேணி வருவது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

தைப்பொங்கலுடன்தொடர்புடைய ஒரு தமிழ்ப் பழமொழி, ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' எனக் கூறுகிறது. முன்னே வரும் நாள்களைச்

(08ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸினுள் குழப்பம் ஹக்கீமுடன் கட்சியினர் முரண்பாடு?

கொழும்பு,ஜன.15

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைவது தொடர்பாக அக்கட்சிக்குள் குழப்ப நிலை தோன்றியுள்ளது. அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் இணைவுக்கு எதிராகவும், ஏனைய உறுப்பினர்கள் இணைவுக்கு ஆதரவாகவும் செயற்படுகின்றனர் எனத் தெரியவருகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணையாத பட்சத்தில் தாம் தனித்து அரசுடன் இணைவது என்ற நிலைப்பாட்டில் கட்சியின் நான்கு எம்.பிக்கள் உள்ளனர்.

பஷீர் சேகுதாவூத், எஸ். நிஜாமுதீன், பைஸல் காசீம் மற்றும் கே.ஏ. பாயிஸ் ஆகியோரே தனித்து அரசுடன் இணையும் நிலைப்பாட்டில் உள்ளவர்கள் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கட்சியிலிருந்து யார் அரசுடன் இணைந்தாலும், இணையாவிட்டாலும் நான் அரசுடன் இணைந்தே தீருவேன் என்ற நிலைப்பாட்டில் உள்ளார் புத்தளத்தைச் சேர்ந்த அக்கட்சியின் எம்.பியான கே. ஏ. பாயிஸ்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புத்தளம் மாவட்ட மத்திய குழு, நேற்று முன்தினம் சனிக்கிழமை கூடியது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உடனடியாக அரசுடன் இணைய வேண்டும் என்று கட்சியின் தலைமைத்துவதற்திற்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு இணைய கட்சி முன்வராத பட்சத்தில் கே.ஏ. பாயிஸ் தனித்து அரசுடன் இணைய கட்சி இடமளிக்க வேண்டும் என்றும் அக்குழு ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது.

பாயிஸ் தனித்து அரசுடன் இணைய கட்சி இடமளிக்காவிட்டால், அவர் தாமாகவே அரசுடன் இணைய முடியும் என்றும், இந்த விடயத்தில் அவர் முழுச் சுதந்திரமாகச் செயற்பட முடியும் என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட மத்திய குழு ஏகமனதாக அறிவித்துள்ளது.

**நேற்று சந்தித்து ஆராய்வு**

இந்த நிலையில் அரசுடன் இணைவது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் வெள்ளிக்கிழமை இரவு சந்தித்துப் பேசின.

இச்சந்திப்பின்போது சமாதான முன்னெடுப்பு, வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள், ஆழிப்பேரலை மீள் நிர்மாணம், முஸ்லிம்களுக்கெதிரான கருணா குழுவின் அட்டகாசம், அபிவிருத்தி போன்றவை பற்றிப் பேசப்பட்டன. இவற்றுக்கெல்லாம் அரசு சாதகமான பதிலையளித்தாலே நாம் அரசுடன் இணைவது சாத்தியமாகும் என முஸ்லிம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானச் செயலகப் பணிப்பாளராக ஜயந்த தனபால மீண்டும் நியமனம்

கொழும்பு,ஜன.15

அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளராக ஜயந்த தனபாலவை மீண்டும் நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம் பதவிக்கு போட்டியிடுவதற்காக அவர் தனது பதவியை ராஜினாமாச் செய்திருந்தார்.

அதன் பின்னர் அந்தப் பதவியை வகித்து வந்த பாலித கொஹன்ன வெளிவிவகார அமைச்சின் செயலாளராக நேற்றுமுன்தினம் ஜனாதிபதி முன் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றிருந்தார்.

இதையடுத்து ஜயந்த தனபாலவை அந்தப் பதவிக்கு நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த வருடம் நவம்பர் வரை அவர் இந்தப் பதவியை வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (1)

## மட்டு. மாங்கேணியில் ஐந்து படையினர் பலி!

கொழும்பு,ஜன.15

மட்டக்களப்பு - மாங்கேணிப் படைமுகாம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஆட்லறித் தாக்குதலில் 5 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 3 படையினர் காயமடைந்துள்ளனர் என்று பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலையிலும், இரவிலும் இரு தடவைகள் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது ஆட்லறி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன என்று கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 4 படையினர் கொல்லப்பட்டனர். 2 படையினர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை வேளை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

**நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் முயற்சியாக**

## அரசையும் புலிகளையும் சந்திக்க யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு முடிவு

கொழும்பு,ஜன.15

தற்போது உருவாகியுள்ள நெருக்கடி நிலை தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அரசையும் விடுதலைப் புலிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை நெருக்கடி நிலையை அடைந்துள்ளதை அடுத்து, இரு தரப்பினரையும் கண்காணிப்புக் குழு சந்தித்து பேச்சு நடத்தவுள்ளது என்றும் -

இச்சந்திப்பு எப்போது இடம்பெறும் என்ற தகவல் வெளியாகவில்லை என்றும் - கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

## மண் சரிவு, வெள்ளப்பெருக்கு காரணமாக இதுவரை 87 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

கொழும்பு, ஜன.15

நாட்டில் இடம்பெற்றுவரும் மண் சரிவு, வெள்ளப்பெருக்கு என்பன காரணமாக இதுவரை 87 ஆயிரம்பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என அனர்த்த நிவாரண அமைச்சு அறிவித்துள்ளது.

நுவரெலியா, வலப்பனை பிரதேச செயலர் பிரிவின் பல பகுதிகளில் தொடர்ந்து மண்சரிவு இடம்பெற்றுவருவதாக மேலதிக மாவட்ட செயலாளர் டி.பி. ஜெயக்குமார் தெரிவித்தார்.

மண்சரிவு காரணமாக பல கிராமங்களுக்கான போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளன. இதன்காரணமாக காயமடைந்தவர்களையும், நோயாளர்களையும் விமானப் படையினரின் ஹெலிகொப்டர்கள் மூலம் கொண்டு சென்றதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வலப்பனைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் 40 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை -

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அங்கு ஆயிரத்திற்கு மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளனர். (12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சங்கானைக் கிராமத்தின் கண்ணாகத் திகழும் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் ஏறக்குறைய 16 வருடங்கள் அளப்பரிய சேவையாற்றி ஏராளமான மாணவர்களின் கல்வி வேட்கையை நிறைவேற்றி அரிய பல சாதனைகள் நிலைநாட்டி இன்று யா/ சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாசாலையின் அதிபராகப் பதவியுயர்ந்து மிளிர்கின்ற

**செல்வி ஜெயராணி நாகலிங்கம்**

B.A (Hons) - Geography, PG Dip. Education, M.Phil (Education)

அவர்களை வாழ்த்தி, மேலும் பல உயர்வுகள் பெற ஆசிகூறி சங்கானை இலுப்பைத் தாழ்வு முருகனின் பாதார விந்தங்களை விரவி அமைகின்றோம்

கலாநிதி சிவஸ்ரீ.சிவ. நித்தியானந்த சிவாச்சார்யார் குடும்பம்.
(ஆதீன குரு, ஸ்ரீ முருகன் தேவஸ்தானம், இலுப்பைத்தாழ்வு, சங்கானை)

(65972)

## கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றும் **ம.சிவானந்தன்** அவர்களின் அன்புத் தங்கை

**திருமதி நிரஞ்சினி ஆனந்தரூபா**

அகால மரணமடைந்தமையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/யூனியன் கல்லூரி,
யா/பொன். பரமானந்தர் வித்தியாசாலை, தெல்லிப்பழை.

(56983)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

ஒளி தந்து மறைந்த ஒளி

ஒளி தர 26 . 04 . 1949



ஒளி பெற 17 . 12 . 2006

**அமரர் யோண் பிலிப் அலோசியஸ்**

விண்ணகத் தந்தையே! உம்மிடம் ஒளி பெற்றிருக்கும் உமது அடியான் யோண் பிலிப் அலோசியஸ் எமக்காக உம்மிடம் கேட்கும் வரங்களை நிறைவாகத் தந்து எம்மை வழிநடத்த வேண்டுமென்று எங்கள் ஆண்டவரும் உமது சுதனுமாகிய யேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கின்றோம் அன்புத் தந்தையே - ஆமென்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (16.01.2007) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்திலும், யாழ். அருள் ஆச்சிரமத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

243, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.021 222 3302. (57035)

தாய், சகோதரர்கள்,
மனைவி, பிள்ளைகள்.

# INFORMATION TECHNOLOGY PARK

Jaffna, Sri Lanka.
Under the purview of the
**Ministry of Science and Technology**

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.

Office : 021 222 3641
Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்

**Diploma Courses**

- Diploma in DTP
- Diploma in MS Office
- Diploma in Hardware Technology

**On-Line Classes**

- Diploma in PC Application & Office Management (MS Office syllabus included)

**Work shop**

- PC Maintenance & Repairs

**Certificate Courses**

- Ms Word
- Ms Excel
- Ms Access
- CorelDRAW
- Page maker
- Visual Basic
- Java
- HTML & J Scripts
- Pascal
- C/C++

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்

வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் 02/02/2007

வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் 03/02/2007

சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் : 250/-

Centre for Information Technology

-Executive Officer

## அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்.நகர் மைய றோட்டரக் கழகத்தின 16 ஆவது அங்குரார்ப்பண தின நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி சிறுவர் இல்லத்தில் நடை பெறவுள்ளது.

(1-202)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சற்குணநாதன் - அனுஷா தம்பதியரின் புதல்வன்

**செல்வன் கிரிஷான்**

(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2006 இல் 136 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு இவரை வாழ்த்திப் பாராட்டுவதோடு இவர் கல்வி கற்ற பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்கள் அனைவருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அம்மா, அப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், அக்காமார், தம்பி, தங்கை, அன்ராமார், சித்தப்பா (கனடா), மாமா சுதன்.

கோண்டாவில் கிழக்கு. (57023)

## விற்பனையாகின்றது

உலகின் தலை சிறந்த வீரர் விஸ்வநாதன் ஆனந்த் விளையாடிய சதுரங்க விளையாட்டுகள் அடங்கிய Anand's 109 Best Games எனும் நூல் விற்பனையாகின்றது. விலை ரூபா 100/= மட்டுமே. *தொடர்புகளுக்கு:* GKCA இல.05, வைமன் வீதி, நல்லூர்.

## அன்பொளி கல்வியகம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்

*2006 - புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டும் நிகழ்வும் ஒன்று கூடலும்*

**காலம்: 15.01.2007 திங்கள் பி.ப 3 மணி**

*எமது கல்வி நிலையத்தில் கல்விகற்று சித்தியடைந்த மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

இயக்குநர், ஆசிரியர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் திருநாவுக்கரசு



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் பொன்னையா லேன் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் திருநாவுக்கரசு 12.01.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் செல்லாச்சியின் மருமகனும் தனலக்சுமி, கனகாம்பிகை, யோகேஸ்வரி, ஜெயலக்சுமி, பாலசுப்பிரமணியம், அருளாந்தராஜா, இந்திராணி, இந்திராஜா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற நவரட்ணம், தேவராஜா ஆகியோரின் மைத்துனரும் புவனலோஜினி, சிவலோஜினி, செந்தூர்வாசன், சத்தியலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பகீரதன், ரவிச்சந்திரன், ஜெகன்மோகன் ஆகியோரின் மாமனும் அம்சத்வாணி, அம்சத்வதன், மிதுனகா, விபீஷன், அபிலாஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2007) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை. (57036)

தகவல்:
குடும்பத்தினர்.

## நாகமுத்து கதிரவேல்

(முன்னாள் சமுவெல் சன்ஸ் தொழில்நுட்பவியலாளர்)



உடுப்பிட்டி, இமையாணனை பிறப்பிடமாகவும், உரும்பிராயை வாழ்விடமாகவும் தற்போது திருநெல்வேலியில் வசித்தவருமாகிய நாகமுத்து கதிரவேல் 04.01.2007 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தங்கராசா காலஞ்சென்ற தர்மலிங்கம், செல்வபாக்கியம் (நியூசிலாந்து), முத்துராணி (நியூசிலாந்து), துரைசாமி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இங்கிலாந்தில் வசிக்கும் இரத்தினலிங்கம், தவலிங்கம், தேவரமணி, சக்தி மற்றும் அருந்ததி (நியூசிலாந்து), முரளிதரன் (கனடா), கார்த்தியாயினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிவன் அம்மன் வீதியில் அமைந்திருக்கும் சோதி மாளிகையில் 04.01.2007 அன்று நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோதி மாளிகை*
*சிவன் அம்மன் வீதி,*
*திருநெல்வேலி.*

தகவல்:
மதிவதனி (பேறாமகள்)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா மதியாபரணம்

*(உரிமையாளர், வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்)*



இணுவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மதியாபரணம் 14.01.2007 கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (57028)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## திருமதி ஆழ்வாப்பிள்ளை சிவதங்கமலர்

அல்வாய் தெற்கு சந்திரபவனத்தை வதிவிடமாகக் கொண்ட திருமதி ஆழ்வாப்பிள்ளை சிவதங்கமலர் 11.01.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பிரபல வர்த்தகரும் யாழ்ப்பாணம் நவீன சந்தை சந்திராஸ் உரிமையாளருமாகிய காலஞ்சென்ற கா.ஆழ்வாப்பிள்ளையின் அன்பு மனைவியும் ச.சிவதாசன், ச.கருணாகரன் (பாஷையூர் சென்.அன்ரனிஸ் மகளிர் பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதிகளான த.சந்திரமலர், சு.சிவமலர், யோ.ரவிமலர், லி.ஜெயமலர் ஆ.ஜெயச்சந்திரன், ஆ.சரத்சந்திரன், ஆ.சுகந்தமலர், ஆ.ராஜமலர் ஆகியோரின் அன்புத் தாயும் க.தர்மகுலசிங்கம் (யாழ்.பல்கலைக்கழகம்), வி.சுந்தரலிங்கம் (மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை), சி.யோகேந்திரன், நா.லிங்கராசா (புகையிரத திணைக்களம், வவுனியா), ஜெயச்சந்திரன் அமுதா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.01.2007 அன்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'சந்திரபவனம்'*
*அல்வாய்.* (57024)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி புனிதவதி கதிரேசு



மாகியப்பிட்டியை பிறப்பிடமாகவும் களுவாஞ்சிக்குடியை தற்போதைய வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி புனிதவதி கதிரேசு நேற்று 14.01.2007 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரர் கதிரேசுவின் அன்பு மனைவியும் வசீகரன் (மாவட்ட வைத்திய அதிகாரி, களுவாஞ்சிக்குடி), வசந்தி, சுவீற்றி, வதனி, ரஜனி, ஆகியோரின் அன்புத் தாயும் மஞ்சுளா, சந்தானதாசன், (கட்டார்), குமாரவேல் (கணக்காளர், கொழும்பு), ஜெயரஞ்சித் (தொழில்நுட்பவியலாளர்), சிவலோகநாதன் (சவூதி) ஆகியோரின் அன்பு மாமியும் இந்திகா, தில்ஷான், லக்ஷிகா, கிரிஷன், சுகீர்த்திகா, திலக்ஷன், விதுஷாந் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் களுவாஞ்சிக்குடியில் இன்று (15.01.2007) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கானை.*

தகவல்:
வதனி (மகள்).

## திருமதி செல்வரத்தினம் கனகம்மா



தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் அரியாலை A.V. றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் கனகம்மா நேற்று 14.01.2007 காலமாகிவிட்டார்.

அன்னார் இளையதம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகளும் செல்லையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் செல்வரத்தினத்தின் (பிரான்ஸ்) மனைவியும் சுபாஜினியின் அன்புத் தாயும் மேகவர்ணனின் அன்பு மாமியும் இன்ப நிலவனின் பேர்த்தியும் தங்கம்மா, நடேசு, மாணிக்கன், பஞ்சரத்தினம், சண்முகலிங்கம் ஆகியோரின் சகோதரியும் இராசம்மா, செல்லம்மா, செல்வபூபதி (ஜேர்மனி), செல்வராணி, செல்வநாயகி, செல்வசோதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2007) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஒரு மணியளவில் சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

A.V. *றோட்,*
*அரியாலை.*

தகவல்:
செல்வரத்தினம் (கணவர்).

## முருகேசு கந்தையா



சக்கலாவோடை காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கந்தையா (14.01.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இலட்சுமணன் - நாகம்மா தம்பதியரின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாக்கியத்தின் சகோதரனும் சீனியர், ஐயாத்துரை, முருகேசு, கோமளம் (மணி), உருக்குமணி, சதாசிவம், கந்தசாமி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் குகநாயகி, சிவநாயகி, இன்பநாயகி, கனகேஸ்வரி, பாலசுப்பிரமணியம் (முகாமையாளர், சிற்றி வைன் ஸ்ரோர்ஸ், யாழ்.), அருட்செல்வம், தயாநிதி, புவனேஸ்வரி, முருகதாஸ், விக்னேஸ்வரன் (தாஸ் ஸ்ரோர்ஸ், காரைநகர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா, கனகரட்ணம், சத்தியசீலன், நாகேஸ்வரராவ், அனுசா, திருட்செல்வம், செல்வச்சந்திரன், அருமைநாயகம் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சக்கலாவோடை,*
*காரைநகர்.* (57026)

தகவல்:
பாலசுப்பிரமணியம் (மகன் - சிற்றி வைன் ஸ்ரோர்ஸ்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
# தைத்திருநாளே வருக! எம்மக்களுக்கு நிம்மதியைத் தருக!
வள்ளுவர் ஆண்டு: 2038

# குடாநாட்டு மக்கள் தமது முன்னோர் காலத்து வாழ்வியல் முறைகளுக்குத் திரும்பினாலே மீட்சி!

**கதிரவா அருள் செய்வாயே!**

*அழிந்தது கொடும்போர் - என்று*
*ஆதவன் ஆசி நல்க*
*விழிதன்னில் வழியும் செந்நீர்*
*விடிந்திட மறைந்துபோக*
*ஒழிந்தது கொடும்போர் - என்று*
*ஒப்பரும் அமைதி பூக்க*
*கழிப்புடன் மகளிர் பொங்க*
*கதிரவன் அருள் செய்வாயே.*

**- விகடகவி.**

**விடியலைத் தா பொங்கலே!**

புலர்ந்தது புத்தாண்டு புலங்களும் மகிழ்ந்தது
புலன்களும் ஒன்றித்து பொங்கலை நினைத்தது
தலங்களில் தலைசாய்த்து துயர்தனை சுமந்த
தலைகளும் நிமிர்த்தது துதிமுகம் தெரிந்தது
நிலமது வெளித்திட நாற்றிசை சுற்றமும்
நலம்பெற நேர்த்தியாய் நெற்றியில் நீறுடன்
வலம்வரும் தைப்பொங்கல் விடியலை மடிதர
வாருங்கள் பொங்குவோம் வாழ்த்துகள் கூறுவோம்.

**- அளவையூர் கே.ஆர்.திருத்துவராஜா.**

**சமாதான நாயகியாய் வருக!**

*தாய் நிலத்திலிருந்து தைமகளை வேண்டுகிறேன்*
*தரணியெங்கும் அவலங்களைப் போக்கிவிடு*
*நோய் நொடிகள் இல்லாத வாழ்வைக் கொடுத்துவிடு*
*நூறாண்டு வாழ்கின்ற நூதனத்தைப் பெருக்கிவிடு*
*தீயதை ஒழித்து தேவைகளைத் தந்துவிடு*
*திருநாட்டுக்கு சமாதானத்தைக் கொடுத்துவிடு*
*வா மகளே தை மகளே எங்கள் வாசலுக்கு*
*வாஞ்சையுடன் உனை வரவேற்று மகிழ்கின்றோம்.*

**- மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தன்.**

'தீதும் நன்றும் பிறர்தரவாரா' என்பது பண்டைத் தமிழ் முதுமொழியாகும். இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் அனுபவிக்கின்ற துன்ப துயரங்களுக்கு அவர்களே காரணமாயினர். பழைமைகளை அவர்கள் மறந்த காரணத்தாலேயே பல அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடுகள் விசுவரூபமெடுத்து அவர்களை வாட்டி வதைத்து விட்டன; தொடர்ந்து வாட்டியும் வருகின்றன.

கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த குடாநாட்டு மக்கள் அரிசியை மட்டும் தமது பிரதான உணவாகக் கொண்டவர்கள் அல்லர். விசேட வைபவ நாள்களுக்கு மட்டுமே அவர்கள் அரிசியை நாடினர். மற்றும்படி தமது நாளாந்த உணவிற்கு குரக்கன், தினை, வரகுடன் மரவள்ளி, இராசவள்ளி, கொம்பு வள்ளி, சிறுகிழங்குடன், பனம் பண்டங்களையுமே பெரிதும் பயன்படுத்தினர்.

## தன்கையே தனக்குதவி என்ற தத்துவத்தை மறந்ததால் இன்றைய பரிதாப நிலை

### தன்கையே தனக்குதவி

தன்கையே தனக்குதவி என்ற சித்தாந்தத்துடன் குடாநாட்டு மக்கள் வாழ்ந்த காரணத்தால் மேற்படி உப உணவுப் பொருள்களை அவர்கள் தமது கமபுலங்களில் அபரிமிதமாக விளைவித்தார்கள். அவர்கள் தம் மதியபோசனத்திற்கு தினை, வரகு அரிசிக்கே முக்கியத்துவம் கொடுத்தார்கள். காலை மாலை ஆகாரத்திற்கு மற்றைய உப உணவுப் பொருள்களைப் பயன்படுத்தினர். அதன் காரணமாக சலரோகம், சிக்குன்குனியா போன்ற நோய்களில் இருந்து விடுபட்டு மிக மிக ஆரோக்கியமாக வாழ்ந்தனர். கொழும்பிலிருந்து அரிசி, சீனி, கோதுமை மா கப்பல்களை எதிர்பார்த்து அன்றைய குடாநாட்டு மக்கள் என்றுமே வாழ்ந்தது கிடையாது.

**உதயனின் தைப்பொங்கல், புத்தாண்டுச் சிறப்பு மலர்களுக்கென்று தனித்துவமான கட்டுரைகளை எழுதுபவர் மூத்த எழுத்தாளரும், பத்திரிகையாளருமான செல்லப்பா நடராசா.**

**அவை, தமிழ் மக்களின் வாழ்வியலின் பல்துறைசார்ந்த ஆக்கங்களை மீள நினைக்க வைப்பதிலும், இளம் சந்ததியினக்கு அறிமுகம் செய்வதிலும் சிறப்புத் தன்மை கொண்டு மிளிர்பவை.**

**இம்முறை, குடாநாட்டு மக்கள் தமது அன்றாட அத்தியாவசியப் பொருள்களை பெறுவதற்கு அங்கும் இங்கும் அல்லாடும் சூழ்நிலைகளை அனுபவமாகக் கொண்டு, எமக்கு முந்திய சந்ததிகளின் உணவுவகைகள் மற்றும் உணவு உற்பத்திகளின் சுய நிறைவை நினைவுபடுத்துகிறார்.**

### அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட கதை

அரசனை நம்பிப் புருசனைக் கைவிட்டவளின் கதையாக இன்று யாழ்ப்பாண மக்களின் சரித்திரம் எழுதப்பட்டுக்கொண்டிருக்கிறது. இதற்கான சில உதாரணங்களைப் பார்ப்பது இன்றைய காலத்தின் தேவையாகின்றது.

**செல்லப்பா நடராசா**

கடந்த தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் ஒருகிலோ அரிசியை இருநூற்றைம்பது ரூபாவுக்குத் தானும் பெற்றுக்கொள்ள முடியாது தவித்த மக்கள் ஒரு கிலோ தினையை தொண்ணூறு ரூபாவுக்குத் தேடி வாங்கிய அவலத்தை நான் நேரில் அவதானித்தேன். பல வகையான கிழங்கு வகைகளைப் புறந்தள்ளியமையாலும் அவற்றை வேண்டிய அளவு விளைவிக்கத் தவறியமையாலும் வெதுப்பகங்களின் முன்னால் நானூறு (05ஆம் பக்கம் பார்க்க)

**புதிய வாழ்வு மலரட்டும்**

தமிழராட்சி தமிழர் காண
வருகின்ற பொங்கலே வருக, வருக!
தைபிறந்தால் ஏதும் வழி பிறக்குமா?
தமிழர் நிலையில் மாற்றம் பிறக்குமா?

ஆண்ட தமிழன் அடிமைப் படுகிறான்
அல்லல் அவலமென அவஸ்தையுறுகிறான்
உரிமை யல்லவா உயிரின் மூச்சு
உணர்வு அல்லவா மக்களின் வீச்சு

எழுக தமிழனே! எழுக - உனது
எழுச்சியில் இதயம் பொங்கி மகிழட்டும்
வருக, பொங்கலே வருக! - உனது
வரவிலே புதிய வாழ்வு மலரட்டும்.

**- செ.பரமநாதன்.**

**இனிய பொங்கல் படைப்போம்**

*எங்களின் இருண்ட வாழ்வை*
*எண்ணிடும் இதயம் பொங்க*
*எங்குமே அவல ஓலம்*
*ஏங்கிடும் உள்ளம் பொங்க*
*தங்கமாம் தமிழே பொங்கத்*
*தரணியில் வாழ்வு பொங்க*
*எங்குமே மங்களம் பொங்க*
*இனித்திடும் பொங்கல் படைப்போம்.*

**- வ.யோகானந்தசிவம்.**

**தை மகளே வருக!**

அடிமையை விரட்ட தைமகளே வருக!
அமைதியை தந்திட தைமகளே வருக!
கொடுமையை நிறுத்திட தைமகளே வருக!
கோன்முறை வகுத்திட தைமகளே வருக!
மடமையை கொளுத்திட தைமகளே வருக!
மக்களைக் காத்திட தைமகளே வருக!

**- செல்வி கலாநிதி.**

மக்கள் மனதில் சாந்தியும் சமாதானமும் பொங்கிப் பெருக,
இத் தைப்பொங்கல் திருநாள் வழிவகுக்கட்டும்.



கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

மாரீசன்கூடல் இளவாலையைச் சேர்ந்த மாணவிகள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2006 இல் சித்திபெற்றதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.



யா/ உடுவில் மகளிர்கல்லூரி
**பிரணவி சச்சிதானந்தம்**
162 புள்ளி



யா/ மாரீசன்கூடல் சுப்பிரமணியம் வித்தியாலயம்
**தேனுஜா சாந்தகுமார்**
147 புள்ளிகள்



யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
**கஜானா தவக்குமார்** - 137 புள்ளிகள்

இவர்கள் பல்லாண்டு காலம் எல்லாவளமும் பெற்று வாழவேண்டும் என்று கலப்பராகிரி முருகன் அருள் வேண்டி பிரார்த்தித்து நிற்கின்றோம்.

மாரீசன் கூடல்,
இளவாலை.

வாழ்த்துவோர் : நிர்வாகசபையும், கிராமமக்களும், கலப்பராகிரி சனசமூக நிலையம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி **க.விதுஷிகா** (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) 2006ஆம்ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று பாடசாலையில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் 31ஆம் இடத்தையும் பெற்ற அரியாலையைச் சேர்ந்த கருணாகரன் - சறோஜாதேவி தம்பதியரின் புதல்வி செல்வி விதுஷிகாவை மனதாரப் பாராட்டுகின்றோம்.

அரியாலை.
(65968)

வாழ்த்துவோர்:
தாத்தா, பெரியமாமா, சின்னமாமா, பெரியம்மா குடும்பத்தினர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

848 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மகரம் **21 23 25 41**

**12-01-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 5657712 - 5671853

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 298,867 | 10/- | 2,988,670/- |
| 2 இலக்கங்கள் | 27,498 | 20/- | 549,960/- |
| 1 இல. + லக்கினம் | 27,255 | 30/- | 817,650/- |
| 2 இல. + லக்கினம் | 2,493 | 100/- | 249,300/- |
| 3 இலக்கங்கள் | 724 | 500/- | 362,000/- |
| 3 இல. + லக்கினம் | 71 | 5,000/- | 355,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 5,822,580/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 356,918 | | 6,846,080/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,667,300/-

தொடர் இல.4784774 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 ஜனவரி 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, செல் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 5660591-3-08 |
| நுவரெலியா | 5659111-0-45 |
| குருநாகல் | 5658380-5-34 |
| ஹம்பாந்தோட்டை | 5658087-7-33 |
| மட்டக்களப்பு | 5665271-5-92 |

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பேரானந்தம் உமாசுதன்**
(போட்டோ சுதன்)

நிஜமாய் 11.12.1974 நித்தியமாய் 15.01.2004

நித்தம் கேட்கும் குரல்களிலே
நின் குரல் இல்லை ஐயா
காணும் இடமெல்லாம் உனை
காணாது விழி தேடுதையா
தனயன் உனைப் பிரிந்து
ஆண்டுகள் மூன்று ஓடிமறைந்தது - ஆனால்
ஆறவில்லை எம் துயரம் ஐயா
ஆறாத் துயரில் மூழ்கி எம்
விழிநீர்ப் பூ தருகின்றோம்
விண்ணில் நீ இளைப்பாற

காராளர் வளவு,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

என்றும் உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2006ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ள திகலராசா - ஸ்ரீமதி தம்பதியரின் அருந்தவப் புதல்வன் செல்வன் **தி.திலக்ஷன்** அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துதவிய அதிபர், ஆசிரியர்களுக்கும் அன்புடன் பாராட்டினைத் தெரிவிப்பதோடு, இவர் இன்னும் பல சித்திகள் பெற்று பேரோடும், புகழோடும், சீரோடும், சிறப்போடும் காலமெலாம் வாழ்க என வாழ்த்தி மனதாரப் பாராட்டி எல்லாம்வல்ல வேதவன விநாயகர் தும்பிக்கைமேல் நம்பிக்கை வைத்து எந்நாளும் என்கைகூப்பி வணங்கி நிற்கும்:

இராமலிங்கம் வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி. (56995)

மாமா மாணிக்கம் ஸ்ரீறங்கன்.

## A/L 2009

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளும் ஆங்கிலமும் ஆரம்பமாகியுள்ளன.

Gr. 1 முதல் 11 வரை ★English Med. 6,7 &8
★புலமைப் பரிசில் (பரீட்சைகளுடன்)
★சிங்களம் (பேச , எழுத, வாசிக்க)

**SHAM ROCK** ஈச்சமோட்டை, யாழ்.

## விற்பனைக்கு

Japan Optoma Projector (New Model) 300 inch உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776141061,
0776623342,2113

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

தென்கிழக்கு ப.நோ.கூ. சங்கம்
சிற்றுண்டிச் சாலை, கொடிகாமம்

மேற்படி கடையில் தங்கநகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

**கிளைமுகாமையாளர்.**

## வாடகைக்கு

*42/6, அம்மன் வீதி,கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வீடு வாடகைக்கு சகல வசதிகளுடன் உண்டு. மற்றும் T.V.S. மோட்டார் சைக்கிள், T.V., பிரிஜ், பேபி கோட் பொருள்கள் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்புகொள்ளவும்.* (57022)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்
**ஜெயக்குமாரன் தனுஷன்**



தோற்றம் 04-05-1986 மறைவு 15-01-2005

**ஆண்டு இரண்டு சென்றதோ
உம் அன்பு முகம் மறையுமோ!
என்றும் உம்மை மறவாது எம் உள்ளம்.
உம் ஆத்மா சாந்தி பெற என்றும்
பிரார்த்திக்கும்**

அப்பா, அம்மா,
அண்ணா, அக்கா, மச்சான்,
மச்சாள், பெரியம்மா,
கனடாமாமா, மாமி, சித்தி,
உற்றார், உறவினர்.

பழனி ஆண்டவர் கோயிலடி.
கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில்.

## கண்ணீர் அஞ்சலி




எமது பிரதேச செயலகப் பிரிவில் வளலாய் கிராம அலுவலராகக் கடமை புரியும் குமாரசாமி கதிரமலைநாதன் அவர்களின் அன்புத் தந்தையும் எமது பிரதேச செயலகத்தில் நிதியுதவியாளராக கடமை புரியும் எஸ்.சண்முகராசா அவர்களின் மாமனுமாகிய

**சிவப்பிரகாசம் குமாரசாமி** (J.P.)
(ஓய்வுபெற்ற ஆசிரியர் -பத்தமேனி, அச்சுவேலி)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் அத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், கோப்பாய். பிரதேச செயலகம், ... [illegible]

## பாராட்டி வாழ்த்துகிறோம்



## றெறாசோ மாபிள் பதித்தல்

மேலைத்தேய நவீன தொழில் நுணுக்கங்களுடன்
வடகிழ் மாகாண
ஆரம்ப கால தொழில் விற்பன்னர்
*தேவையான மூலப் பொருள்களுடன் வேலை செய்து கொடுக்கப்படும்.*
சுவர், தரைக்கும் மாபிள் ரைல்ஸ் பதிப்பவர்கள்.

**'மாபிள்ஸ்'** கண்டாமை, தொல்புரம்
தொ.பே : 222 5286, 222 6729

## Kaji Beauty Parlour



திருமணப் பெண் அலங்காரம், Dance Make up மற்றும் Eyebrow, Threading, Waxing, Wedding Cake மற்றும் பல அழகு சேவைகளுக்கு தொடர்புகொள்க.

இதற்கான பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. 01.02.2007 - 10.02.2007 வரை பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தொடர்பு - Training College அருகாமை,
கோண்டாவில் வீதி, கோப்பாய்.
தொ.பே. 021 222 7041

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**தர்மதாஸ் மோகனதாஸ்**



பிறப்பு: 29.06.1984
இறப்பு: 14.12.2006

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே.
என்னிடம் நம்பிக்கை கொள்பவர்
இறப்பினும் வாழ்வர்
உயிரோடு இருக்கும்போது என்னிடம்
நம்பிக்கை கொள்ளும் எவரும்
என்றுமே சாகமாட்டார்.
இதை நீ நம்புகிறாயா? யோவான் 11.25-26
பாசத்தின் வடிவுடன்,
இளமையின் துடிப்புடன்
உன்னைக் கண்டோம்
14.12.2006 வரை நாம்
விண்ணகத் தந்தையின் விருப்புடன்
விண்ணகம் நீ சென்றாலும்,
விடியல்கள் பல கழிந்தாலும்,
விட்டு விலகிடோம் என்றும்
உம் நினைவிலிருந்து நாம்.
உம் ஆத்மா சாந்திபெற
ஆ[illegible]டவரிடம் வேண்டுகின்றோம்
உம் குடும்பத்தின்ர் நாம்.

கோரியடி,
பருத்தித்துறை. -குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவு



அமரர் ,
**பசுபதிப்பிள்ளை பொன்னுத்துரை**
(புங்குடுதீவு-4)

மலர்வு 1932.04.24 உதிர்வு 2005.02.05

திதி: திரயோதசி

*ஈராண்டுகள் சென்றால் என்ன
எத்தனை யுகங்கள் சென்றாலும்
எம் பிஞ்சு மனங்களில் தங்கள்
பிரிவின் துயர்கள் - நினைவலைகளாக
அலைமோதிக்கொண்டேயிருக்கும் ஐயா.*

35/1, குமார வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (57013) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

*சின்னத்தம்பி வேலாயுதம்*



கொக்குவில் மேற்கு, வராகி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலாயுதம் 12.01.2007 ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதி - தெய்வானை தம்பதியரின் மருமகனும் பரஞ்சோதியின் அன்புக் கணவரும் ரவீந்திரநாத்(ஜேர்மனி), பிறேம்நாத்(பிரான்ஸ்),பிரம்மிளா, கோபிநாத்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தி, செல்வி ஆகியோரின் மாமனும் நாகம்மா, தவமணி மற்றும் காலஞ்சென்றவர்களான நடராசா, அன்னமுத்து, செல்லத்துரை, சின்னம்மா ஆகியோரின் மைத்துனரும் சிவபாக்கியத்தின் சகோதரனும் சேகர், சந்திரன், குணம், ஞானம், செல்வா, காஞ்சா ஆகியோரின் பாசமிகு மாமனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியை 16.01.2007 நாளை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வராகி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு.* (57014)

தகவல்:
ந.சேகர் (பிரான்ஸ்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன்

# தைத்திருநாளே வருக! எம்மக்களுக்கு நிம்மதியைத் தருக!



## வள்ளுவர் ஆண்டு: 2038

### அவலங்கள் நீங்க வேண்டி மனம் ஒன்றிப் பிரார்த்தியுங்கள்

சீரும் திருவும் நிறைந்த எங்கள் சிவபூமித் திருநாடு சிறப்புற இறைவனை இறைஞ்சுவோம்.

தமிழர்களின் வாழ்வில் தைப்பொங்கல் திருநாள் தனித்துவமானது. ஆதவனுக்குப் பொங்கல் செய்து அனைவரும் உண்டு, மகிழ்ந்து வாழ்வதற்கு இந்த நாளை பிரார்த்தனைக்குரிய நாளாகப் போற்றிப் பேணுவர்.

தர்மத்தின் அடையாளமாகிய சூரியபகவான் எங்கும் வியாபித்துப் பேதமின்றி ஒளி தருபவன். அவனிடம் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. உண்மையின் வடிவமாக விளங்குபவன்.

எனவே, அன்பர்கள் அனைவருக்கும் உண்மை நிலைத்திட உதிக்கின்ற உதயனை உணர்வுபூர்வமாக வழிபாடு செய்யுங்கள்.

எங்கள் மண்ணில் அவலங்கள் அனைத்தும் அகன்றிட வேண்டும் என்று மனம் ஒன்றி ஒன்றுபட்டுப் பிரார்த்தியுங்கள்.

சொல்லொணாத் துயரில் மூழ்கி இருக்கும் மக்களுக்கு ஆறுதல் சொல்லுங்கள். தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற தாரக மந்திரத்தை நம்புங்கள்.

சாந்தியும் சமாதானமும் அமைதியும் அனைவருக்கும் விரைவில் கிடைக்கவேண்டி அமைகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசார்ய சுவாமிகள்
*இரண்டாவது குருமகா சந்நிதானம்.*

### மகிழ்ச்சியும் சமாதானமும் பொங்கட்டும்

உழவர்கள் தங்கள் உழைப்பின் பயனை அடைவதை இறைவனுக்கு நன்றி கூறி வழிபடுதலே அறுவடைத்திருநாள். பாடுபடுபவனுக்கே இந்த பாரிடம் சொந்தமையா என்ற கவிமணியின் கூற்றினை [illegible] உலகின் அச்சாணியாக விளங்கும் உழவுத் தொழிலின் உயர்வை [illegible] ந்து போற்றும் விழாவாக பொங்கல் விழா அமைகின்றது.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது நெடுங்காலம் தொட்டு தமிழரிடையே பேசப்பட்டுவரும் பழமொழியாகும். இதற்கு அமைய ஒவ்வொரு ஆண்டும் தை பிறக்கும்போது நல்வாழ்வு பிறக்கப்போகின்றது என்ற நிறைந்த எதிர்பார்ப்புக்களுடன் வாழ்ந்த தமிழர்கள் இறுதியாய் ஏமாற்றத்தையே காண்கின்றார்கள்.

இயற்கையை இறையென்று முழு மனதுடன் உணரும்போதும், முழு மனதுடன் வழிபடும்போதும், அதன் தன்மைகளை மதிக்கும்போதும், உள்ளத்தால் வெள்ளையாக வாழும்போதும், உழைப்பே உயர்வென்று உணரும்போதும், ஆசைக்கு அணைகட்டும்போதும், பேராசை பேரழிவென்று புரியும்போதும், உழைப்பினால் ஊதியம் உயரும்போதும், அதில் ஒரு பகுதியை தருமமாய் தரும்போதும் மனிதன் பூரணமடைகின்றான்.

இத்தகைய இணையில்லா குணங்களும், தன்மைகளும் மனிதன் மனதில் குடியேறி உலக மக்கள் ஒன்றுபட்டு சுபீட்சம் பெருகிட மண்ணுயர மனமுயர, மனித நேயம் உயர, அச்சமற்ற வாழ்வும் சாந்தியும் அன்பும் சமாதானமும் நிலைத்திட இப்பொங்கல் திருநாளில் வாழ்த்தி வரவேற்கிறேன்.

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்,
*சிவாச்சார்ய பீடாதிபதி, அகில உலக சைவக் குருமார் சம்மேளனம்,*
*பிரதம குரு வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்*

### அச்சம் நீங்கி அமைதி பொங்கட்டும்

''தைப்பொங்கல் திருநாளில் புதிய உற்சாகமும் புதிய நம்பிக்கையும் பொங்கட்டும்; பால் பொங்கும் நன்னாளில் துன்பமும் துயரமும் தூர விலகி ஓடட்டும்; ஒவ்வொருவரின் இல்லங்களிலும் அச்சம் நீங்கி அமைதி பொங்கட்டும்''

கிழக்கில் இருப்பிடங்களை இழந்து அகதி முகாம்களில் வாழும் மக்கள் முகங்கொடுக்கும் அவலங்கள் ஒரு புறமும், வடக்கில் பாதை மூடப்பட்ட நிலையில் பொருள்களின் தட்டுப்பாட்டுக்கு மத்தியில் வாழும் மக்களின் மன ஆதங்கங்கள் மறுபுறமும் என்ற நிலையில் மக்கள் எதிர்கொள்ளும் சூழலைத் தவிர்ப்பதற்காக எம்மாலான அனைத்து முயற்சிகளையும் செய்து வருகின்றோம். உங்களைத் தவிக்கவிட்டு, சம்பிரதாய வாழ்த்துக்களைக் கூறி எம்மால் ஒதுங்கிவிடமுடியாது.

ஏனெனில் நாங்கள் மக்களின் நண்பர்கள். எமது அரசியல் பணி நேரடியாகவோ, மறைமுகமாகவோ மக்களின் நலன் சார்ந்ததாகவே இருக்கும். இந்த உண்மைகள் உங்களுக்குத் தெரியும்.

சொந்த இடங்களில் சுய உரிமைகளோடு சுதந்திரமாக வாழவைக்கவேண்டுமென்பதற்கான உறுதியெடுத்து சேவையாற்றி வருகின்றோம். அந்த நன்னாள் விரைவில் மலரும் என்ற நம்பிக்கை நம் அனைவருக்குள்ளும் இத் தைத்திருநாளில் பொங்கட்டும்.

டக்ளஸ் தேவானந்தா,
*சமூக சேவைகள், அமைச்சரும்,*
*ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும்.*

### யுத்த சூழ்நிலை நீங்கட்டும்

உழவர் திருநாளாம் பொங்கல் நன்னாள் மக்கள் அனைவரும் சூரிய பகவானுக்கு பொங்கல் பொங்கிப் படைத்து மகிழ்ச்சி அடையும் பெருநாள்.

ஆடி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரை வருவது தெட்சணாயணம். தைப் பொங்கல் நன்நாளில் இருந்து ஆனி மாதம் முடியும்வரை உத்தராயண காலமாகும். பொங்கல் திருநாள் உத்தராயணத்துடன் ஆரம்பிப்பதால் இத்திருநாள் சிறப்பான ஒரு நன்னாளாக அமைகின்றது.

பொங்கல் திருநாளில், நாட்டுமக்கள் அனைவரும் யுத்த சூழ்நிலை நீங்கி நிம்மதியாக வாழ இறைவனைப் பிரார்த்திப்பதுடன் பொங்கல் நல்வாழ்த்துகளையும் தெரிவிக்கின்றேன்.

''இன்பமே சூழ்க. எல்லோரும் வாழ்க.''
''லோகா சமஸ்தா சுகினோ பவந்து''

சிவஸ்ரீ பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகர சிவாசாரியார்
*சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம்,*
*இலங்கை.*

### சுபீட்சமும் வளமும் பெறுக

பிறந்துள்ள இந்த 2007ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே உலக வாழ் இந்துக்களால் பக்தியுடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்படும் இந்த தைப்பொங்கல் தினத்திலே உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

விவசாயத்துறையிலே முன்னேறிய செழிப்படைந்த நாடாக இலங்கை ஆதிகாலம் தொட்டு உலகில் பிரபலமடைந்துள்ளது. இலங்கை வாழ் மக்களின் வாழ்வுடனும் பொருளாதாரத்துடனும் விவசாயத்துறை பின்னிப்பிணைந்துள்ளது. அதற்கு உறுதுணையாக விளங்கிய எருதுகள் கால்நடைகளுக்கும் நன்றிக் கடனாக பொங்கி வழிபடுகின்றனர்.

நன்றி மறப்பது நன்றன்று என்ற கூற்றை மெய்யாக்கியவர்கள் இலங்கையர்களே. இது இலங்கையர்கள் யாவருக்குமுள்ள குணாம்சமாகும். அவ்வறெனில் பல இனங்களாக இந்நாட்டில் வாழும் எமக்கிடையில் ஒற்றுமையுள்ளது என்பதை புரிந்துகொண்டிருப்பீர்களென்று எண்ணுகிறேன். இவ் வையகத்தில் வாழும் அனைவருக்கும் சூரியனின் தேவைப்பாடானது ஒரே வகையிலாகும். அவ்வாறிருப்பின் ஒரு சூரியனுக்குக் கீழ் வாழும் உங்களுக்கும் எமக்கும் அதன் தாக்கங்கள் ஒரே வகை யிலேயே அமைந்திருக்கும்.

எனவே இந்த முக்கியமான தினத்தில் இன, மத, மொழி பேதங்களை மறந்து ஒரே இனமாக கைகோர்த்து எமது இலங்கை தாய் நாட்டிற்கு சமாதானத்தை உருவாக்கு வதற்காக பயங்கரவாதத்திற்கு எதிராக எழுந்திருந்து எமது தாய் நாட்டைப் பாது காக்க அணி திரள்வோம். இன்று நீங்கள் சூரியனுக்குப் படைத்த நன்றிக் கடனின் மகிமையால் உங்கள் அனைத்து விவ சாய நடவடிக்கைகளும் செழிப்படைந்து உங்கள் எதிர்கால வாழ்வு சுபீட்சமும் வளமும் பெற ஒரு மனதுடன் பிரார்த்திக்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் வாழ்த்துக்கள்.

மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி,
யாழ். பாதுகாப்புப் படைத் தளபதி.

### நீதியும் நிம்மதியும் நிலைக்குக!

தமிழர்களின் திருநாள் தைப்பொங்கல் பெருநாள். விடிவுதரும் கதிரவனுக்கு நன்றிசொல்லி வாழ்த்தும் திருநாள். இத்திருநாளை பக்தியோடு வரவேற்போம். உழுதுண்டு வாழ்வு தரும் உழவர் பெருமக்களை நன்றியோடு போற்றும் நன்னாளில், பாடுபட்டு உழைக்கும் உழைப்பாளிகளை ஊக்குவித்து வாழ்த்துவோம்.

வீடுகள் தோறும் பொங்கல் படைத்து, உறவுகளை அன்பால் உபசரிப்போம். வீடுகளை இழந்தும், உறவுகளை இழந்தும் விடிவின்றி வேதனைப்படும் மக்களுக்கு இந்நாளில் ஆறுதல் செய்வோம்.

நீதியும், நிம்மதியும் நிரந்தர விடிவும் இவ்வுலகில் நிலைத்திட பொங்கல் திருநாளில் அன்பர்கள் அனைவரும் பிரார்த்தனையில் ஈடுபடுவோமாக.

செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்.

## குடாநாட்டு மக்கள் தமது முன்னோர்.....

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*கிராம் பாணுக்காக அதிகாலை வேளைகளில் மழை என்றும் பனி என்றும் பாராமல் நீண்ட வரிசையில் காத்திருக்கவேண்டிய அவலங்களையும் குடாநாட்டு மக்கள் அனுபவிக்க நேர்ந்தது.*

**மஞ்சத்திற்கு வந்தது பஞ்சம்**

*இன்றைய குடாநாட்டு மக்களின் பாட்டன், பாட்டி காலத்தில் அனைத்துக் கமக்காரர்களது வீடுகளிலும் மூடைமூடையாக மரவள்ளிக்கிழங்குச் சீவல் இருந்ததுண்டு. மரவள்ளி மா பிட்டு கோதுமை மாவைவிடச் சுவையானது என்பது எனது அனுபவம்.*

*கோதுமை மாவையும் பாணையும் எப்பொழுது குடாநாட்டு மக்கள் உட்கொள்ளத் தொடங்கினார்களோ அன்றே அவர்கள் பஞ்சத்தை மஞ்சத்திற்கு வரவழைத்துக் கொண்டவர்களாயினர்.*

**யாமிருக்கப் பயம் ஏன் என்றது பனை**

*வரலாற்றில் ஒருதடவை குடாநாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டவேளை பார்த்து 'யாமிருக்கப் பயமேன்' எனப் பனை கூறியதாக மூத்தவர்கள் சிலேடையாகப் பேசிக்கொண்டனர். பஞ்சம், பசி எதுவென்றே தெரியாது வாழ்ந்த குடாநாட்டு மக்களின் பரம்பரை, இந்த நாள்களில் ஒடியற் கூழுக்கே வழியில்லாது பஞ்சப்படும் நிலையும் மிகப் பரிதாபகரமானது.*

*ஒரு காலத்தில் யாழ்ப்பாண மக்கள் தத்தம் வீடுகளில் மோராகாரத்தை நீராகாரமாகக் கொண்டனர். பனஞ்சீனி, பனம் கற்கண்டு, பனம் வெல்லத்தைப் பாவித்துப் பயன்பெற்ற மக்கள் கூட்டம் ஒன்று அவற்றையும் புறந்தள்ளி வாழத் தொடங்கியதன் காரணமாக இன்று ஒருகிலோ சீனிக்கு முந்நூறு ரூபாவை அள்ளிக் கொடுக்கும் நிலை ஏற்பட்டதையும் அனுபவ ரீதியாகப் பார்த்து நிற்கிறோம்.*

**உணவுக்காக இலுப்பை எண்ணெய்**

*இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்னர், குடாநாட்டில் பனைகளுக்கு அடுத்தபடியாக இலட்சோப இலட்சம் இலுப்பை, வேம்பு, புளி மரங்கள் இருந்துள்ளன. மக்கள் தமது உணவுக்காக வீடுகள் தோறும் இலுப்பை எண்ணெய்யையே பயன்படுத்தினர். ஓர் இலுப்பை விதையையோ வேப்பம் விதையையோ அவர்கள் அவம்போக விட்டது கிடையாது. பூசை வேளைகளின்போது இலுப்பை எண்ணெய் கொண்டு பலநூறு சரவிளக்குகளால் குடாநாட்டுத் திருக்கோயில்கள் ஒளிர்ந்த காலம் இனி என்றுமே திரும்பிவரப் போவதில்லை!*

*எமது மூல வளங்களை அழியவிட்டமையாலேயே இன்று காற்போத்தல் தேங்காய் எண்ணெய் 300 ரூபாவிற்குத் தானும் பெற்றுக்கொள்ள முடியாமலுள்ள ஒரு பரிதாபகரமான நிலையையும் காண முடிகின்றது.*

**தென்னையும் தண்டப் பணமும்**

*எனது பாட்டனார் கமம் செய்த காலத்தில் அவரது தோட்டக் கிணற்றடியைச் சுற்றிவர சுமார் ஐம்பது தென்னைகள் காணப்பட்டன. அவ்வாறே குடாநாட்டில் சகல கிணற்றடிகளும் காட்சி அளித்தமையையும் இன்று நினைவுகூர வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.*

*இன்றைய சந்ததியினர் வளவுகள் தோறும் தென்னை பயிரிடுதலை மறந்து வாழத் தலைப்பட்டதன் காரணமாகவே அவர்கள் தேங்காய் ஒன்றுக்கு நூறு ரூபா வரை தண்டப்பணம் செலுத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.*

*ஒரு காலத்தில் பசும் பாலிலும் பாற்பொருள்களிலும் வீட்டிற்குவீடு தன்னிறைவுடன் வாழ்ந்த மக்கள் கூட்டம் தம் பண்டைய வாழ்வியல்புகளை மறந்து வாழப் பழகிக் கொண்டமையின் விளைவுதான் இன்றைய பாற்பஞ்சமாகும்.*

**வேப்பம் புகையின் மகத்துவம்**

*எங்களது பாட்டிமார்களின் காலத்தில் அவர்கள் நுளம்புத் தொல்லையைச் சமாளிக்க வீடுகள்தோறும் உமி நெருப்புச் சட்டிகளில் தூவி புகைக்கவிடுவார்கள். வேப்பம் விதைகளைத் தூவிப் புகைக்கவிடுவார்கள். அந்தப் பழைமையையும் வழமையையும் மக்கள் மறந்தமையும் இன்றைய ''சிக்குன்குனியா'' நோயின் தாக்கத்திற்கு ஒரு காரணமாகும். அன்றைய வேப்பம் புகை நுளம்புகளை முற்றாக விரட்டி அடித்தது.*

**பஞ்சத்தை மஞ்சத்துக்குள் வரவழைத்த குடாநாட்டு மக்கள்**

*இன்று கூட்டுறவுச் சங்கக் கடைகளில் மருந்துப் பொருள்போல ஒரு சிறிய அளவில் நுளம்புத் திரிச் சுருள்களையும் விநியோகம் செய்கிறார்கள். அவற்றுக்காகவும் மக்கள் வரிசையாக நிற்கும் கண்ணுறாவியையும் காணமுடிகிறது.*

**செத்தல் உற்பத்தியில் சாதனை**

*காலஞ்சென்ற திருமதி ஸ்ரீமோவோ பண்டாரநாயகா அவர்கள் பிரதமராக விளங்கிய காலத்தில் பலநூறு தொன்கணக்கில் செத்தல் மிளகாயை உற்பத்தி செய்து தென்னிலங்கைக்கு அனுப்பிச் சாதனை படைத்த குடாநாட்டு மக்கள் இன்று 250 கிராம் செத்தல் மிளகாய்க்காக கூட்டுறவுச் கடை வாசல்களில் காத்துக்கிடக்கும் நிலை ஏன் வந்தது என்பதும் சிந்தனைக்கும் ஆய்வுக்குமுரிய விடயமாகும்.*

**பொங்கல் சிந்தனை**

*தமது தனித்துவமான அடையாளங்கள் பலவற்றை குடாநாட்டு மக்கள் இழந்துவிட்டார்களோ என்ற ஐயப்பாடே இன்று மேலோங்கி நிற்கின்றது. அவர்கள் தமது பழைய வாழ்வியல்புகளை இத்தைத்திருநாளில் ஒருகணம் திரும்பிப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களால் தீதும் நன்றும் பிறர்தர வாரா என்பதன் அர்த்தத்தையும் தன்கையே தனக்குதவி என்ற வாழ்வியல் தத்துவத்தையும் நன்கு விளங்கிக் கொள்ளமுடியும். குடாநாட்டுமக்கள் ஒருகணம் தம்மைத் தாமே சுதாகரித்துக்கொண்டு மீண்டும் தலைநிமிர்ந்து நின்று தமது பழைமைவாய்ந்த நடைமுறைகளில் வீறுநடை போடுவதை இன்றைய பொங்கல் சிந்தனையாகக் கொள்ள வேண்டும்.*

★

2007 ஆம் ஆண்டுக்கான ஆங்கில மொழிமூலமான பாலர் பாடசாலை புதிய அனுமதிகள்

O/L மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் → CERTIFICATE IN ENGLISH & DIPLOMA IN ENGLISH → ஆங்கில அறிவை விருத்தி செய்து கொள்ள

சிறார்களுக்கான ஆங்கிலப் பாட நெறிகள் 5+ to 14+ சிறார்களுக்கு

BBS இன் யாழ்ப்பாணம் மற்றும் வளாகங்களில் வார நாட்களிலும் வார இறுதி நாட்களிலும் நடைபெறும்

Pre-Foundation
Foundation
Lower Intermediate
Intermediate
Upper Intermediate

IELTS
ஆங்கில அறிவை வளர்க்கவும், வெளிநாடு செல்ல இருப்போருக்குமான விசேட வகுப்பு. உங்கள் வசதிக்கேற்ப வகுப்புக்களில் இணைந்து கொள்ளலாம்.

ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலை

| வயது 2+ முதல் வயது 3 வரை | வயது 3+ முதல் வயது 4 வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre-School |

O/L மற்றும் A/L சித்தி பெற்ற மாணவர்களுக்கான
- Nursery Teachers Training Course
- English Language Teaching Training Course

BRITISH BUSINESS SCHOOL

இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | Dr. [illegible] இல்லம், [illegible], புலோலி. | இல:78, கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

HOT LINE : 021-222-5796

British BUSINESS SCHOOL
Where Students Come First

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளிருட்டிய நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்
போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)

T.P.: 0777-903090
0777 246117

22, சோமசுந்தரம் அவென்யூ, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.


## வாழ்த்துகின்றோம்

யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியசாலை மாணவன்

### நகுலேஸ்வரன் சிவப்பிரியன்

2006 ஆம் அண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 135 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ள இவரை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மேலும் கல்வியில் பல உயர்வுகளைப் பெற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க. வித்தியாலயம்

2006ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற பின்வரும் மாணவர்களாகிய

1. சி.சயந்தன் - 143
2. கே.லிசாந்தி - 141
3. ப.விதுர்சன் - 141
4. அ.கசில்டன் - 139
5. க.யனார்த்தனா - 139
6. த.தர்சிகா - 137
7. ஜெ.தட்சாயினி - 137
8. வி.ஹரிப்பிரியா - 135
9. ம.கபில்ராஜ் - 133
10. தி.ஜோதினி - 133

(65571)

ஆசிரியரையும், 100இற்கு மேல் புள்ளிகளை எடுத்த மாணவர்களையும் இவர்களைக் கற்பித்த ஆசிரியர்களையும் அதிபரையும் வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.

எமது பாடசாலையில் 2006 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

சி.மாதங்கி -161 (தென்மராட்சி வலய 8 ஆம் இடம்)
இ.சுதனா -149
சு.தயாவதி -142
ப.அருண்செயா -138
வை.நிருபன் -133

ஆகிய ஐந்து மாணவர்களையும் அவர்களுடன் 100 புள்ளிகளுக்கு மேல் எடுத்துத் தேர்ச்சியடைந்த

| | |
|---|---|
| யோ.ஜீவிக்கா -132 | தி.டிசாந்தி -110 |
| சி.திருக்குமரன் - 131 | செ.உமாசங்கர்-109 |
| க.அனோஜன்-131 | சு.சகானா-109 |
| ந.சுஜீவன்-124 | பா.துவாரகா-104 |
| ஈ.பிரசாத்-119 | ப.தர்ஜிலிகா-104 |
| பி.செந்தூரன்-113 | த.கீர்த்தனா -103 |

ஆகிய 12 மாணவர்களையும் பாராட்டுவதோடு, இவர்களை நன்கு பயிற்றுவித்த ஆசிரியர் சிவஞானம் ஞானகுமாரனையும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கிய அதிபர், பகுதித் தலைவர், ஆசிரியர்களையும் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

## தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - கொடிகாமம்
## பதவி வெற்றிட விளம்பரம்

கீழ்க் குறிப்பிடப்படும் இரு பதவிகளுக்கும் சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிக்கின்ற சேவை மனப்பான்மையுடைய, முழு நேரமாக உழைக்கும் ஆர்வமுடைய, தகைமை உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. தற்காலிக கிளை முகாமையாளர்கள்**

1. வயதெல்லை - 18-40 வயது வரை விண்ணப்ப முடிவுறும் திகதியன்று இருத்தல் வேண்டும்.
2. தகைமை - க.பொ.த. (சாதாரண தரம்) சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
3. வேதனம் - சகல படிகளும் உள்ளடங்கலாக வேலை செய்யும் நாளொன்றிற்கு 250/- வழங்கப்படும்.

**02. காவலாளி**

சம்பள குறியீட்டு இல. 315/16 (சு.நி. 58/2003 இன் படி)
சம்பள அளவுத் திட்டம் - 4,500 - 60/10-65/10-5,750
(சம்பள அளவுத் திட்டத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிருபங்களுக்கமைவாக 2,500/- சம்பள அதிகரிப்பும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.

1. வயதெல்லை - 18-40 வயதிற்கிடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. தகைமை - 8ஆம் வகுப்பில் சித்தியடைந்திருப்பதுடன் சிறந்த தேக ஆரோக்கிய மானவராகவும் இருத்தல் வேண்டும்.
3. பிணை - மேற்படி இரு பதவிகளுக்கும் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் சங்கத்தின் கோரப்படும் ரொக்கப் பிணையும் உறுதிப் பிணையும் வழங்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவங்கள் அனுப்புதல்**

*சங்கத் தலைமையகத்தில் ரூபா 20/- செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 30.01.2007ஆம் திகதிக்கு முன்னதாக ''பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம், பருத்தித்துறை வீதி, கொடிகாமம்'' எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு குறித்த பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.*

தென்.கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
கொடிகாமம். (சி/51844) - பொதுமுகாமையாளர்.


# IBS

சுண்டுக்குளி, நல்லூர்.

தரம் 3முதல் O/L வரை, தரம் 5 புலமைப்பரிசில்
Gr.6 ENGLISH MED.
புதிய பாடத்திட்டத்திற்கமைய நடைபெறுகிறது.
புதிய வகுப்புகள் வழங்கப்படுகின்றது


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் கல்வி கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய செல்வன் சிறிதரன் கார்த்திக் 148 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவருக்கு கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் இவர் மேன்மேலும் கல்வியில் மேம்பட வாழ்த்துகிறோம்.

பொன்னுத்துரை சிறிதரன்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2006ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான,

குகநேசன் கேமராஜ் - 163
(யா/ பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை)
இராமகிருஸ்ணன் தமிழினி - 145
(யா/வட்டு. இந்து ஆரம்பப் பாடசாலை)
தியாகமூர்த்தி இந்துஜா - 133
(யா/பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை)

இம்மாணவர்கள் சகல துறைகளிலும் மென்மேலும் தொடர்ந்து சாதனை புரிய எமது குலதெய்வங்களின் அருள்வேண்டி வணங்கி வாழ்த்துகின்றோம்.

கற்பகசோலை நன்மை விருத்திச் சங்கம்,
கற்பகசோலை சனசமூக நிலையம்,
கற்பகசோலை கிராம முன்னேற்றச் சங்கம்,
கற்பகசோலை மாதர் முன்னேற்றச் சங்கம்,
கற்பகசோலை இளைய நட்சத்திர விளையாட்டுக் கழகம்.

## சேவை நலன் பாராட்டு



யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகச் சிறந்த சேவை யாற்றி ஓய்வு பெறுகின்ற

உயர்திரு.

### நா.சுவாமிநாதன்

அவர்கள், நீண்ட ஆயுளோடு சுகதேகியாக வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/கோப்பாய் தெற்கு
கந்தவேள் த.க.பாடசாலை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவனான ஓம் ஹரி செல்வப்பிரகாசநாயகம் - லீலா தம்பதியரின் செல்வப் புதல்வன்

செல்வன்

### ஓம்ஹரி செல்வப்பிரகாசநாயகம் நிதுசன் (இணுவில் மேற்கு)

168 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் 2ஆம் இடத்தினையும், மாவட்ட மட்டத்தில் 11ஆம் இடத்தினையும் பெற்றுள்ள இவருக்கு நல்வழி காட்டிய அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து, நிதுசனை பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

''திருப்பதி'',
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.

வாழ்த்துபவர்கள்:
அம்மா, அப்பா, தங்கை,
மாமா குடும்பம்.

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் P.சிவகுமார் அவர்களின் அன்பு மாமா

### அமரர் K.ஈஸ்வரலிங்கம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

## சேவை நலன் பாராட்டு



### நா.சுவாமிநாதன்

உதவிக்கல்விப் பணிப்பாளர்,
(ஆரம்பக் கல்விப்பிரிவு)

15.01.2007 அகவை 60 காணும் ஆரம்பக் கல்விப் பிரிவு பணிப்பாளர் உயர்திரு நா.சுவாமிநாதன் அவர்களைப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## சேவை நலன் பாராட்டு



### நா.சுவாமிநாதன்

உதவிக்கல்விப் பணிப்பாளர்,
(ஆரம்பக் கல்விப்பிரிவு)

15.01.2007 இல் அகவை 60 காணும் நலன்புரிக்கழக நீண்ட கால உறுப்பினரும், ஆரம்பக் கல்விப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளரும், சிரிய நற்பண்பாளருமாகிய நா.சுவாமிநாதன் அவர்களை நீடூழி காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

ஊழியர் நலன்புரிக்கழகம்,
வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோப்பாயைச் சேர்ந்த சிவசங்கரநாதன் - குமுதினி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரி செல்வி



### சி.வித்தியா

*யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் கற்று தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை - 2006இல் 166 புள்ளிகளை ஈட்டி, பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் 24ஆம் இடத்தையும் பெற்றதைப் பாராட்டுவதோடு கற்றோங்கி சகலகலாவல்லியாக நீடு வாழ்கவென இவரை வாழ்த்துகின்றோம்.*

இளவாலை. (65669) அப்பா மாமா, பேபி மாமா, நந்தினிப் பெரியம்மா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஜெயக்குமார் - ஜெயந்தி தம்பதியரின் செல்வப் புதல்வி

### பரணிகா

(மகாஜனக் கல்லூரி மாணவி)

2006 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரீட்சையில் 153 புள்ளிகளைப்பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற இவரை பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் கல்வியில் சிறந்து விளங்க கும்பிழாவளைப் பிள்ளையார் அருள்வேண்டி வாழ்த்துகிறோம்.

அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

வாழ்த்துபவர்கள்:
அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பா, சித்திமார், சகோதரர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஊரைச் சேர்ந்த

### செல்வி தயாபரன் நிசாயா

அவர்கள் 2006 ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததுடன் மாவட்ட மட்டத்தில் 89 ஆம் இடத்தினையும் பாடசாலை மட்டத்தில் முதலாவது இடத்தினையும் பெற்று கல்வி பயின்ற மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் எமது ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார். அவர் மென்மேலும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டுமென எமது நிலையத்தின் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தெல்லிப்பழை வாலிபர் ஐக்கிய சனசமூக நிலையம்,
மத்தியவான் விளையாட்டு கழகம்,
தாய்மார் அருகில், தெல்லிப்பழை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### செல்வி ரஜீபா

தெல்லிப்பழை வீமன்காமம் மகா வித்தியாலய மாணவி செல்வி ரவிச்சந்திரன் ரஜீபா 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 136 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்கு எமது பாராட்டுதலை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மருதனார்மடம். *பாடசாலைச் சமூகம்.*

## தியாகி அறக்கொடை நிறுவனம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற,
யாழ். மாவட்ட அலுவலகத்தின் ஆதரவுடன் நடத்தும்

**4 மாத கால அழகுக்கலைப் பயிற்சி நெறி**

கேக் ஐஸிங், உணவு தயாரித்தல், பூ வேலை, அழக்குக் கலை (Facial & Hair style) மற்றும் FABRIC PAINTING பயிற்சிகள்

இடம்: தியாகி அறக்கொடை நிறுவனம்
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
ஆரம்பம்: **31.01.2007 முற்பகல் 10 மணி**

பயிற்சி பெற விரும்புவோர் 25.01.2007ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவும். உரிய விண்ணப்பப் படிவங்களையும் விவரங்களையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- நிர்வாகி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

# தை பிறந்தாலாவது வழி திறக்குமா?

இன்று தைப்பொங்கல்.

இது உழவர் பெருநாள். உழைப்பவர் திருநாள். 'தமிழர் திருநாள்' என்றும் இதைப் போற்றுவர்.

தமிழரின் வள்ளுவர் ஆண்டுக் கணக்கு, தைப்பொங்கல் தினமான இன்றுதான் புதிதாக ஆரம்பமாகின்றது. தமிழருக்குத் தைப்பிறப்பு இன்றுதான். அதாவது தமிழரின் புத்தாண்டுப் பிறப்பாகவும் இதைக் கொள்ளலாம்.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள். உலக இயக்கத்துக்குக் காரணனான உதயனுக்கு நன்றிப் பெருவிழாவாகத் தைப்பொங்கலை அமைத்துக் கொண்டனர், இயற்கையின் இரகசியம் உணர்ந்த நம் தமிழ்ப் பெருமக்கள். அதில் அர்த்தம் நிறையவே உள்ளது.

சக்தியின் மூலவிடம் - ஊற்றுவாய் - சூரியன். அவனின்றி அணுவும் அசையாது. ஆதவனின் சக்தி பச்சைத் தாவரங்கள் வழியாக உலகுக்குப் பதிக்கப்படுகின்றது. சூரியன், ஒளிவடிவில் வாரி வழங்கும் சக்தியைத் தாவர வர்க்கங்கள் தொகுத்து விளைச்சலாக நமக்குத் தருகின்றன.

மூலத்தின் சக்தியை விளைச்சலாக - உணவாக - நமக்கு வழிப்படுத்துவது உழவுத் தொழிலே. அதுவே உலக இயக்கத்தின் பெருங்கருவி; மூலோபாயம். உயிர்ச் சங்கிலிச் செயற்பாட்டின் மூலம் அங்குதான் உற்பவிக்கின்றது.

விளைச்சல் வழியாக உணவையும், அதன் மூலம் உலகுக்கு உயிர்ப்பையும் தருகின்ற உதயனுக்கு உலகத்தவர்கள் - குறிப்பாக உழவுத் தொழில் மேற்கொள்வோர் - நன்றி வெளிப்படுத்த முன்னெடுக்கப்பட்டதே பொங்கல்.

விளைச்சல் மூலம் தமக்குக் கிடைக்கும் மூல உணவான சோற்றுக்குரிய அரசி, நெல் வடிவத்திலேயே தமக்குக் கிட்டுவதால், அது விளைச்சலாகக் கிடைக்கும் தை மாத காலத்தை ஆதவனுக்கு நன்றி போற்றும் வேளையாக - தைப்பொங்கல் நாளாக - தமிழர்கள் தேர்ந்தெடுத்தார்கள்.

கிடைத்த முதல் விளைச்சலிலே - புத்தரிசியிலே - புதுப் பானையில் பொங்கலிட்டு அவனுக்குப் படைப்பார்கள் அவர்கள்.

புத்துணர்வும், புதுவாழ்வும், புத்தூக்கமும், புத்தெழுச்சியும் தரும் காலமாகவும் தைப்பிறப்பைத் தமிழர்கள் கொண்டாடுவது வழமை. அதனால், 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற அதீத நம்பிக்கை, வழிமுறை வழிமுறையாகத் தமிழர்களுக்கு இருந்து வருகின்றது.

ஆனால், ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை இந்த ஆண்டு 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என எதிர்பார்க்கும் - நம்பும் - காலமல்ல. 'தை பிறந்தாலாவது வழி திறக்குமா?' என்று அவர்கள் ஏங்கும் காலமிது.

வடக்கில் 'ஏ-9' வீதி மூடப்பட்டிருப்பதால் யாழ். குடாநாட்டில் ஆறு லட்சம் அப்பாவித் தமிழர்கள் திறந்த வெளிச் சிறையில் சிக்கியிருக்கின்றார்கள்.

அதேபோல, 'ஏ-15' பாதை மூடப்பட்டிருப்பதால் கிழக்கில் பல்லாயிரம் தமிழர்கள், விநியோக மார்க்கம் துண்டிக்கப்பட்டு முற்றுகைக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இன்று பிறக்கும் தையிலாவது இந்த வழிகள் - பாதைகள் - திறக்குமா என்பதுதான் ஈழத் தமிழர்களின் ஏக்கத்துடன் கூடிய எதிர் பார்ப்பு.

உள்நாட்டில் போரினாலும், ஆழிப்பேரலை அனர்த்தத்தாலும் இடம்பெயர்ந்து தொடர்ந்தும் வருடக்கணக்கில் அகதி முகாம்களிலும், நலன்புரி நிலையங்களிலும் தங்க வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் - ஏதிலிகளின் - மனமும் ஏக்கத்தினாலும், எரிச்சலினாலும், மனிதப் பேரவல நெருக்கடிகளினாலும் பொங்கிக் கனன்றுகொண்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியில், இத்தையில் பொங்கப் போவது தைப்பொங்கலா அல்லது போரா என்ற அச்சமே ஈழத் தமிழர் மனம் எங்கும் இன்று வியாபித்து நிற்கின்றது.

இற்றைக்குச் சரியாக ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பொங்கல் வேளையிலே தை பிறந்தபோது வழி பிறக்கும் என்ற நம்பிக்கை நம் எல்லோருக்கும் ஏற்பட்டது உண்மைதான். ஆனால், அப்போது ஆரம்பமான அமைதி முயற்சிகள் இன்று கருகிக் காலாவதியாகிக் கானல் நீராகும் நிலைமை உருவாகியுள்ளது.

'போரும் சமாதானமும்' என்ற இரட்டை வேட அணுகு முறையில் அமைதி முயற்சிகளை ஒட்டிய விவகாரங்கள் கையாளப்பட்டதால், இன்று பொங்கக் காத்திருப்பது புத்தரிசியல்ல, போர்தான் என்ற நெருக்கடி நிலைமையை உருவாக்கியிருக்கின்றது.

தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு, அவர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் நீதியான தீர்வுத் திட்டம் ஒன்றைத் தென்னிலங்கை தரப்போவதில்லை என்ற உண்மை வெளிச்சமாகியிருக்கின்ற இந்தச் சூழலில், உரிமைகளுக்கான தமது போராட்டத்தைத் தொடருவது என்ற ஒரேயொரு பாதைதான் - மார்க்கம்தான் - தமிழர்களுக்கு எஞ்சியிருக்கிறது. மாற்றுப் பாதையே இல்லை என்ற இக்கட்டு.

அந்த யதார்த்தம் - மெய்மைநிலை - புரிந்தமையால் போர் பொங்கப் போகின்றது என்ற உணர்வு தமிழர்கள் மத்தியில் பரவலாக ஏற்பட்டிருக்கிறது.

# தமிழரின் அடிப்படை உரிமைகளை மறுத்து சமாதானத்தை ஒருபோதும் ஏற்படுத்த முடியாது

## அகில இலங்கை இந்துமாமன்றம்

கொழும்பு,ஜன15

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பதன் மூலம் நாட்டில் சமாதானச் சூழ்நிலையை உருவாக்க முடியாது. இதனை அரசு நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

அகில இலங்கை இந்து மாமன்றம் விடுத்துள்ள தைப்பொங்கல் செய்தியில் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்று சிறப்பாகச் சொல்லப்படுவதுண்டு. ஆனால், நம்நாட்டு தமிழ் மக்கள், குறிப்பாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களது துன்பங்களுக்கும், இன்னல்களுக்கும், வேதனைகளுக்கும் மத்தியில் அவர்களது உயிர்களும், உடைமைகளும் அழிந்துவரும் இவ்வேளையில் உதயமாகும் தைத் திங்களும் தைப்பொங்கல் திருநாளும் எந்த வகையிலும் அவர்களுக்கு மகிழ்ச்சியாக அமையாது.

### வழிபாட்டு நாளாக அனுஷ்டிக்கவும்

நமது மக்கள் தைப்பொங்கல் தினத்தன்று கொண்டாட்டங்கள், களியாட்டங்கள் எனக் குதூகலிக்க முடியாது. தமிழ் மக்களது துயரமிகு நிலையில் இந்துமக்கள் அனைவரும் தைப்பொங்கலின் புனிதத்தை உணர்ந்து மதித்து, இதனை ஒரு வழிபாட்டு நாளாக அனுஷ்டிக்க வேண்டும். எமது மக்களின் விமோசனத்திற்காக நாங்கள் அனைவரும் தைப்பொங்கல் நாளன்று பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும் என்பது அகில இலங்கை இந்துமா மன்றத்தின் அன்பு வேண்டுகோளாகும்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் உள்ளூரிலேயே இடம் பெயர்ந்து அகதிகளாக மாறுவது தவிர்க்கப்படவேண்டும். நாட்டில் பரவலாக நடைபெறும் ஆட்கடத்தல் நிறுத்தப்படவேண்டும். தமிழ் மக்களும் நாட்டின் அனைத்து மக்களுடன் சேர்ந்து சமமாக கணிக்கப்பட்டு அவர்கள் சகல உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்கக் கூடியதாக அரசாங்கம் உடனடிக் கவனம் செலுத்தவேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும். தமிழ் மக்களது வேதனை மிகு குறைகளை மனிதாபிமான ரீதியில் அணுகப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

வடக்கு, கிழக்குப் பகுதி மக்களுக்குத் தேவையான உணவு, மருந்து உட்பட ஏனைய அனைத்து அத்தியாவசியப் பொருள்களையும் தொடர்ந்து அனுப்பிவைப்பதற்கும் மாணவர்களுக்கு கல்வி முதலான அத்தியாவசிய தேவைகளை வழங்குவதற்கும் அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மக்களது இன்னொரு அத்தியாவசிய தேவையாகவுள்ள ஏ-9, எ-15 பாதைகளை அரசாங்கம் உடனடியாகவே திறக்கவேண்டும் என்பதையும் மீண்டும் வலியுறுத்துகின்றோம். மக்களது அடிப்படையான மனித உரிமைகளை மறுப்பது எந்த வகையிலும் நாட்டில் சமாதான சூழ்நிலையை உருவாக்கமாட்டாது என்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். - என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.15

யாழ்.பல்கலைக்கழக ஆசிரிய சங்க பொதுக் கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு முகாமைத்துவ பீட IIஆம் மாடியில் நடைபெறவுள்ளது. (202)

## வேம்படியில் சுடப்பட்டவர் நேற்று இனங்காணப்பட்டார்

யாழ்ப்பாணம்,ஜன.15

யாழ்.நகரப் பகுதியில் வேம்படி வீதியில் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானவரின் சடலம் நேற்று இனங்காணப்பட்டது.

கிறிஸ்தவ அமைப்பு ஒன்றைச் சேர்ந்த நல்லதம்பி ஞானசீலன் (வயது 38) திருநகர் என்பவரின் சடலம் என அவரது மனைவி நேற்று அடையாளம் காட்டியுள்ளார்.

அவரது மனைவி மேரி, சடலத்தை அடையாளம் காட்டினார் என்றும் -

அவரிடம் சடலத்தைக் கையளிக்கும்படியும் - யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு உத்தரவிட்டார். (அ-1)

## பொங்கல் விழாக்கள்

தென்மராட்சி, ஜன.15

மட்டுவில் தெற்கு வேரக்கேணி கலைமகள் முன்பள்ளியின் பொங்கல் விழா எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முன்பள்ளி முன்றிலில் நடைபெறவுள்ளது. (202)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன.15

துளிர்கள் நிறுவனத்தினர் நடத்தும் பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிறுவன இயக்குநர் கே.எஸ். ரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்குப் பிரதமவிருந்தினராக யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் காரை எம்.பி. அருளானந்தம் கலந்து கொள்வார். (202)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன.15

யாழ். நகர் மைய றோட்டறக் கழகம் நடத்தும் தைப்பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். சிவகுருநாதர் வீதியிலுள்ள உதயன் விருந்தினர் விடுதியில் நடைபெறும். (202)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன.15

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் பொங்கல்விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வேலணை, வங்களாவடி ஸ்ரீ முருகன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (1- 202)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன.15

சித்தன்கேணி ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலய தைப்பொங்கல் பெருவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும்.

அதேவேளை, தீமிதிப்பு வைபவமும் இடம்பெறும். (1-202)

### நாளை

தை - 02
செவ்வாய்க்கிழமை
16.01.2007
திதி : துவாதசி
முற்பகல் 11.49
நட்சத்திரம் : கேட்டை
முன்னிரவு 07.53 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் பகுதியில் குடும்பஸ்தர் இருவர் வெவ்வேறு இடங்களில் சடலங்களாக மீட்பு

## ஒருவர் சனி இரவு கடத்தப்பட்டவர்

யாழ்ப்பாணம்,ஜன.15

இணுவில் மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த இராசன் என அழைக்கப்படும் குமாரசாமி தயாபரன்(வயது 45) என்ற குடும்பஸ்தரே கொலையுண்டவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு வீட்டுக்குச் சென்ற சிலர் அவரைக் கடத்திச் சென்றனர் என்றும் -

பின்னர் நேற்றுக்காலை இணுவில் தோட்டவெளிக்குச் சமீபமாக சடலம் மீட்கப்பட்டது என்றும் - விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மல்லாகம் நீதிவான் திருமதி ச. இளங்கோவன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை அவரது மனைவியிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை -

இணுவில் தெற்கில் நேற்றுக்காலை சூட்டுக்காயங்களுடன் மற்றொரு குடும்பஸ்தரின் சடலம் மீட்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணிம் கிருஸ்ணகுமார்(வயது 31) என்ற குடும்பஸ்தரின் சடலமே மீட்கப்பட்டது.

மல்லாகம் நீதிவான் திருமதி ச. இளங்கோவன் விசாரணை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## திருமலையில் முஸ்லிம் இளைஞனின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜன.15

திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணேஸ் ஒழுங்கையில் உள்ள பள்ளிவாசலுக்கு அருகாமையில் முஸ்லிம் இளைஞர் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இச்சடலம் மீட்கப்பட்டது. இவர் மொஹமட் நவாஸ் (வயது-22) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ஐ)

# அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறையால் குடாநாட்டு நிறுவனங்களின் பணிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜன15

குடாநாட்டில் நிலவும் அத்தியாவசியப் பொருள்களுக்கான பற்றாக்குறையால் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன.

இவ்வாறு நிறுவனங்களின் அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டில் காகிதாதிகள், எழுது கருவிகள் மற்றும் நிர்வாகத் தேவைக்குப் பயன்படுத்தும் பல்வேறு பொருள்களுக்கும் தொடர்ந்து தட்டுப்பாடு நிலவிவருகின்றது.

இதனால் இங்குள்ள அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அன்றாடக் கடமைகள் பாதிக்கப்படுகின்றன. அத்துடன் மூலப் பொருள்கள் இன்மையால் அபிவிருத்திப் பணிகளும் பாதிக்கப்படுவதாக நிறுவனங்களின் அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர். (202-வ)

# யாழ். குடாநாட்டில் கடந்த வருடத்தில் பிறப்பு - 6,805; இறப்பு - 2,100

குருநகர், ஜன.15

யாழ். மாவட்டத்தில் கடந்த 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் 6805 பிறப்புக்களும் 2100 இறப்புக்களும் நடைபெற்றுள்ளன. இவை பற்றிய விவரங்கள் யாழ். மாவட்டப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிகப் பதிவாளர் செல்வி எஸ். கௌசல்யா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் 6511 பேரும், உடுவில் பகுதியில் 40 பேரும், ஊர்காவற்றுறைப் பகுதியில் 82 பேரும், காரைநகர் பகுதியில் 83 பேரும், நெடுந்தீவுப் பகுதியில் 21 பேரும், அனலைதீவுப் பகுதியில் 14 பேரும், வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றுப் பகுதியில் 54 பேரும் பிறந்துள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் யாழ்ப்பாணம் - நல்லூர்ப் பகுதியில் 1745 பேரும், உடுவில் பகுதியில் 242 பேரும், ஊர்காவற்றுறைப் பகுதியில் 30 பேரும், காரைகர் பகுதியில் 58 பேரும், நெடுந்தீவுப் பகுதியில் 14 பேரும், அனலைதீவுப் பகுதியில் 05 பேரும், எழுவைதீவுப் பகுதியில் 03 பேரும், வடமராட்சிக்கிழக்கு செம்பியன்பற்றில் 03 பேரும் இறந்துள்ளனர் என யாழ். மாவட்டப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (51)

## தென்மராட்சியில் கொடுப்பனவு

தென்மராட்சி, ஜன.15

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஜனவரி மாதக் கொடுப்பனவுகள் தபால் அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

பொது சன உதவிப் பணம் பெறுவோர் மற்றும் காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு உதவிப் பணம் பெறுவோர் ஆகியோருக்கான கொடுப்பனவுகளே பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவால் அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக் கொடுப்பானவுகளை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (1-202)

## யோகாசனப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.15

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலவலகத்தினர் இலவச யோகாசனப் பயிற்சி வகுப்புக்களை நடத்தவுள்ளனர்.

ஆண்கள், பெண்கள் மற்றும் நோயாளர்களுக்கென தனித் தனியாக வகுப்புகள் நடத்தப்படும்.

பயிற்சியில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் பதிவு செய்யுமாறு திணைக்களத்தின் வலிகாமம் பிரதேச அபிவிருத்தி உதவியாளர் கேட்டுள்ளரர். (202-79)

## கலந்துரையாடல்

தென்மராட்சி, ஜன்.15

தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்துள்ளார். (202)

## ஊக்குவிப்பு கொடுப்பனவு

அரியாலை, ஜன.15

யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஜனவரி மாத ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ஆயிரத்து 500 ரூபா நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

கடந்த ஆண்டிற்கான ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களுக்குரிய மேலதிக நேரக் கொடுப்பனவும் வழங்கப்பட்டது. (202-17)

## அக்கரைப்பற்றில் இருவர் சுட்டுக்கொலை

கொழும்பு, ஜன.15

அக்கரைப்பற்று, கண்ணகிபுரம் பகுதியில் நேற்றுப்பகல் இனந்தெரியாதவர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டனர்; ஒருவர் படுகாயமடைந்தார்.

கட்டடத் தொழிலாளர்களான இவர்கள் பொங்கல் தின விடுமுறையில் வீட்டுக்கு திரும்பிய வேளையிலேயே சுடப்பட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. காயமடைந்தவர் உடனடியாக அக்கரைப்பற்று தளவைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அதேவேளை, இரண்டு சடலங்களும் பொலீஸாரால் அங்கு ஒப்படைக்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கிற்காட்டுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.15

குடாநாட்டில் கைத்தொலைபேசி மீள் நிரப்பும் அட்டைகளுக்கு (கிற் காட்) பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

ஏனைய மாவட்டங்களுக்கான போக்குவரத்துப் பாதைகள் தடைப்பட்டுள்ள நிலையில் கைத்தொலைபேசிகள் குடாநாட்டு மக்களுக்கு அத்தியாவசியமாகவுள்ளது.

இந்நிலையில் மீள் நிரப்பும் அட்டைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாலும் அவை அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுவதாலும் பாவனையாளர்கள் பெரும் சிரமப்படுகின்றனர். (202-79-118)

**சிங்களம் / ஆங்கிலம்**

★ மாணவர்கள். (பாடப்புத்தகங்கள்)
★ 9, 10, 11 வகுப்பு மாணவர்கள் (மாவட்டப் பரீட்சை)
★ பாடசாலை விட்டவர்கள் (பேச்சுமொழி)
★ அரச உத்தியோகத்தர்கள் (கட்டாய மொழிப் பரீட்சை)
வகுப்புகள் சுதுமலையிலும் நாவடியிலும்
ஆரம்பம்: 15.01.2007 பிற்பகல் 1 மணி
க. துரைராஜா SLAS (இளைப்பாறிய மேலதிக அரச அதிபர்)
நேர அட்டவணை ஆரம்ப வகுப்பில் தீர்மானிக்கப்படும்.
LANGUAGE CENTRE
மதவடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
நாவடி அ.த.க.பா. அருகில், நாவடி சேர்ந்த,

## ஆசிரிய கலாசாலை பரீட்சைகள் வெள்ளியன்று ஆரம்பமாகின்றன

அச்சுவேலி, ஜன.15

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பரீட்சைகள் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை நாடு முழுவதும் உள்ள ஆசிரிய கலாசாலைகளில் நடைபெறவுள்ளன.

ஆசிரிய பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கான ஆண்டு இறுதிப் பரீட்சை, இறுதிப்பரீட்சை ஆகியன நடைபெறவுள்ளன.

கடந்த வருடம் நடைபெற வேண்டிய 2006ஆம் கல்வி ஆண்டிற்கான பரீட்சைகள் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளினால் நடத்தப்படாமல் பிற்போடப்பட்டு வந்தன.

முதலாம் ஆண்டு பயிற்சி ஆசிரியர்களுக்கான ஆண்டு இறுதிப் பரீட்சை 19ஆம், 20ஆம் திகதிகளிலும் பயிற்சி முடிந்து வெளியேறும் ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சை 22ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை ஏழு தினங்களும் நடைபெறவுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணை அனுமதி அட்டை என்பனவற்றை சம்பந்தப்பட்ட ஆசிரிய கலாசாலையில் பெற்றுக்கொள்ளுமாறு ஆசிரிய கலாசாலைப் பிரிவு பணிப்பாளர் கே. முகமதுத்தம்பி கேட்டுள்ளார். (1-11)

## குடாநாட்டில் விறகுக்கு தட்டுப்பாடு

அரியாலை, ஜன.15

குடாநாட்டில் விறகுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. சில இடங்களில் அதிகவிலையில் விறகு விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விலை அதிகரிப்பாலும் தட்டுப்பாட்டாலும் பொதுமக்கள் பெரும் சிரமம்படுகின்றனர்.

இதேவேளை -

மண் எண்ணெய் அடுப்பை பாவிப்போர் மண் எண்ணெய்யைப் பெற்றுக் கொள் வதில் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (1-202-17)

## உடுவிலில் புகையிலைச் செய்கையாளர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.15

போதியளவு மழைவீழ்ச்சி இன்மையால் உடுவில் பிரதேசத்தில் புகையிலைச் செய்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பிரதேச விவசாயிகள் தற்போது புகையிலைச் செய்கையில் பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

போதிய மழையின்மையால் நீரிறைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தியே செடிகளுக்கு நீர் பாய்ச்சி வருகின்றனர்.

இந்நிலையில் மண் எண்ணைக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் விவசாயிகள் பெரும் சிரமப்படுகின்றனர்.

இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து விவசாய சம்மேளனங்கள் நியாய விலையில் விவசாயிகளுக்கு மண் எண்ணெய் பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (1-202-79)

## நுண்கலை வகுப்புக்கள் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.15

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் இலவச நுண்கலை வகுப்புக்களை நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தவுள்ளது.

இத்தகவலை திணைக்களத்தின் வலிகாம பிரதேச அபிவிருத்தி உதவியாளர் தெரிவித்துள்ளார். வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம் ஆகியவை கற்பிக்கப்படவுள்ளன.

இணைந்துகொள்ள விரும்புவோர் உடன் மணிமண்டபத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (202-79)

## தென்மராட்சியில் அரிசி விநியோகம்

தென்மராட்சி, ஜன.15

தென்மராட்சிக்கிழக்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பொதுமக்களின் நாளாந்தத் தேவைக்கான அரிசி விநியோகிக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை சங்க நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

பொது மக்கள் தமது நாளாந்தப் பாவணைக்கு வேண்டிய அரிசியை தத்தம் கிளைக் கடைகளில் பெற்றுக்கொள்ள முடியும் என சங்கத்தின் பொதுமுகாமையாளர் சி. சிவகுமார் தெரிவித்தார். (1-202)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கிரஸ் தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து இப்பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து இறுதி முடிவெடுப்பதற்காகத் தலா மூவர் அடங்கிய இரு குழுக்கள் இரு கட்சிகள் சார்பிலும் நியமிக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் செயலாளர் நாயகம் எம்.ரி. ஹஸன் அலி, சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் மற்றும் எம்.எப்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆகியோரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அதன் செயலாளர் மைத்திரி பாலசிறிசேன, அத்தாவுட செனவிரட்ன மற்றும் பஷில் ராஜபக்ஷ ஆகியோரும் இவ்விரு குழுக்களிலும் நியமிக்கப்பட்டனர்.

இவ்விரு குழுக்களும் முதற்கட்டமாக நேற்று மாலை அலரிமாளிகையில் கூடி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டன. (இ)

**கணக்கீடு பாலகஜன்**
A/L 2007 DAY BATCH
பங்குடமை
இறுதிச் சந்தர்ப்பம்!
ஆரம்பம்
17.01.2007 புதன் - 5.30 a.m
BRAIN POWER INSTITUTE
(சின்னக்கடை சந்தை அருகில்)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜன.15

தீவக வலயத்தின் நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட மகா வித்தியாலய அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதிபர் தரம் மற்றும் ஆசிரிய சேவையில் தரம்1, 2-1, ஆகிய தரங்களைச் சேர்ந்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

தீவக வலயத்தில் கடமையாற்றுவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என வலயக் கல்விப் பணிப்பாளர் எ.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். (1-202)

## குருநகரில் வயோதிபருக்கு உதவி

குருநகர், ஜன.15

குருநகர் சமூக மேம்பாட்டு அமைப்பு குருநகரில் உள்ள வயோதிபர்களில் பத்துப் பேரைத் தெரிவுசெய்து மாதாந்த உதவிப் பணத்தை வழங்கி வருகின்றது. அமைப்பின் தலைவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த உதவிப் பணம் வழங்கும் ஆரம்ப நிகழ்வு அண்மையில் குருநகர் தொடர்மாடியில் அமைந்துள்ள அமைப்பின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெய்தலம் இயக்குநர் வணபிதா அ.பி. ஜெயசேகரம் அடிகளார், றெக்கிளமேசன் கிழக்கு கிராம சேவையாளர் செ.யூலன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர். தெரிவுசெய்யப்பட்ட இவ்வயோதி பர்களுக்குஉடுபுடைவைகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (203-51)

## புரிந்துணர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவி ஏற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே சமகாலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் முறித்துக் கொள்ளப்படும் என்றும் அறியப்படுகிறது.

ஸ்ரீ.ல.சு.க. - ஐ.தே.க. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பத்தாவது சரத்தின் பிரகாரம் -

ஒப்பந்தம் தொடர்பாக எழக்கூடிய வேறுபாடுகள் குறித்து ஜனாதிபதியும் ஐ.தே.க. தலைவரும் சந்தித்துப் பேசுவது என்று இணங்கப்பட்டிருக்கிறது.

அதன் பிரகாரமே மஹிந்த - ரணில் சந்திப்பு நடைபெறவுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பதா அல்லது முறித்துக்கொள்வதா என்பது குறித்து இன்று அல்லது நாளை ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்று ஐ. தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க எம்.பி.நேற்று 'உதயனு'க்குத் தெரி வித்தார்.

புதிய அமைச்சரவையில் வெளிவிவகார அமைச்சராக மிலிந்த மொறகொடவும் அரசமைப்பு விவகார அமைச்சராக பேராசிரியர் ஜீ.எல். பீரிஸும் நியமிக்கப் படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## வரக்காபொல விபத்தில் இரு தமிழ் இளைஞர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன.15

வரக்காபொல பிரதேசத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு தமிழ் இளைஞர்கள் பலியானார்கள். புஸல்லாவைப் பகுதியைச் சேர்ந்தவர்களான விஜயராஜா சுதாகரன் (வயது 22), இராமையா சுந்தரராஜன் (வயது 23) ஆகியோரே பலியானவர்களாவர்.

கொழும்பிலிருந்து மோட்டார் சைக்கிளில் புஸல்லாவை நோக்கிச் சென்றபோதே இவர்கள் விபத்துக்குள்ளாகினர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்கள் வரக்காப்பொல வைத்திய சாலையில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டன. (12)

## வைத்திய அதிகாரி பிரிவுகளில் உணவுக் களஞ்சியங்கள் அமைப்பு

குருநகர், ஜன.15

யாழ். மாவட்டத்திலுள்ள 7 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் உணவுக் களஞ்சியங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். பிரதி மாகாண சுகாதாரச் சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடந்த வருடம் உணவுக் களஞ்சியம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மானிப்பாய் ஆகிய பிரிவுகளில் களஞ்சியங்களை அமைப்பதற்கான கேள்வி கோரப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்தாகி உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (1-202-51)

## வாகரையில் கிபிர் தாக்குதல்

கொழும்பு, ஜன.15

மட்டக்களப்பு மாவட்டம் வாகரை, கதிரவெளி, பகுதியில் சிறிலங்கா வான் படையினரின் கிபிர் விமானங்கள் நேற்று ஆறு தடவைகள் தாக்குதலை நடத்தியுள்ளன.

நேற்றுக்காலை வாகரை, கதிரவெளி வான் பரப்பில் சிறிலங்கா வான் படையினரின் வேவு விமானம் வட்டமிட்டதைத் தொடர்ந்து பிற்பகல் 12.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை கதிரவெளியில் கிபிர் விமானங்கள் தாக்குதலை நடத்தியுள்ளன.

## கைக்கடிகாரம் ஆஸ்பத்திரியில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.15

யாழ். போதனா வைத்தியசாலைவளாகத்தினுள் பெண்களுக்குரிய கைக்கடிகாரம் கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலையின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியசாலைப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (1-202)

## அமைதியைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பாக நோக்குவதற்கான எதிர்பார்ப்பு உணர்வு தைப்பொங்கல் பண்டிகையின் அங்கமாகவிருக்கும் அனைத்து மரபுரீதியான நடவடிக்கைகளிலும் வெளிப்படுகிறது.

தை மாதத்தின் முதலாம் திகதியில் நிகழும் பொங்கல், எண்ணங்களைப் புதுப்பித்துக் கொள்ளவும், மீள் அர்ப்பணிப்புச் செய்யவுமான ஒரு காலமாகும். இறந்த காலத்தை மதிப்பீடு செய்து எதிர்காலத்தை எதிர்பார்த்து, சாதகமான பார்வை என்பவற்றுடன் நோக்குவதற்குரிய சந்தர்ப்பமாகும். இது எமது நாட்டிலுள்ள பெரும் பான்மையான தமிழ் இந்துக்கள் கடந்த வருட வெற்றிகளைக் கொண்டாடி, எதிர்வரும் வருடத்தில் சிறந்த நாள்களை எதிர் பார்க்கும் தினமாகும்.

சிறந்த எதிர்பார்ப்பு, அபிலாஷைகளை மனதில் கொண்டு இன்று எமது நாட்டில் தைப்பொங்கலைக் கொண்டாடும் அனைத்துக் குடும்பங்களும் எமது நாட்டுக்கு அமைதியைக் கொண்டுவரக் கூடிய சிறந்த நாள்களை எதிர்பார்ப்பதோடு, எமது மக்களிடையே நம்பிக்கை, புரிந்துணர்வு என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கும் எமது உழைப்புகளிலிருந்து கைநிறைந்த அறுவடைகளைப் பெறுவதற்கும் ஒரு வருக்கொருவர் உதவி செய்து கொள்வோம்.

சமாதானம், வளமான வாழ்வு, புரிந்துணர்வு என்பற்றுக்கான உங்களது அனைத்து எதிர்பார்ப்புகளும் உங்கள் வீட்டிலும், நாட்டிலும் நனவாவதற்கு நான் வாழ்த்துவதோடு, சந்தோசமான தைப்பொங் கலுக்கு எனது உள்ளங் கனிந்த தைத்திருநாள் நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'' - என்று அச்செய்தியில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஐ)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.01.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org